# 42. பரமப்பிரகாசம்.

*பண் - பழம்பஞ்சுரம். பண் - கொல்லி.*

**க**ங்கை சூடிறை புதல்வ ரோகன கந்த மாதன வீசரோ
அங்க மாறுடை யைய ரோதுடிக் கைய ரோவெறி சூலமே
செங்கை மீதணி தேவ ரோசிவை செல்வ ரோசுர குஞ்சரி
பங்க ரோவர துங்க ரோநமை யடிமை கொண்டவொர் பரமரே. 1

**வே**ரி கொண்ட கடம்ப ரோகுற மின்னி டஞ்செ லிடம்பரோ
வாரி யுண்டவர் குரவ ரோபவ னிறைவ ரோவறு மங்கைமார்
பீரை யுண்ட புனீத ரோவடி பேணு மன்பர்க ளன்பரோ
பார ருந்தவ ரரைய ரோநமை யடிமை கொண்டவொர் பரமரே. 2

**பா**ல மீதொளிர் கண்ண ரோவுயர் பன்னி ரண்டுகை மன்னரோ
கோல நீறணி சீல ரோதுடி கொட்டி யாடிடு கூத்தரோ
நூல ரோவடி வேல ரோசுரர் நோவ றுத்தவ ரோசிலம்
பால வேதிரி யடிய ரோநமை யடிமை கொண்டவொர் பரமரே. 3

**பூ**வ றாங்கிய மெய்ய ரோமணி பூண்ட கிம்புரி மொய்ம்பரோ
சேவ றாங்கிய கொடிய ரோவறு முடிய ரோவுயர் செல்வராம்
தேவர் தாங்கிய வடிய ரோவதி தேசி லங்கிடு வெண்மலைக்
கோவி றாங்கிய குமர ரோநமை யடிமை கொண்டவொர் பரமரே. 4

**பூ**நி ரம்பிய வழக ரோபடர் போத னார்தொழு குழகரோ
மாநி ரம்பிய கருட கேதனன் மருக ரோநித முருகரோ
தூநி ரம்பிய பழநி வெற்புறை சுமுக ரோவெழி லார்தமிழ்ப்
பாநி ரம்பிய புலவ ரோநமை யடிமை கொண்டவொர் பரமரே. 5

**அ**ண்டர் தம்பகை நாச ரோவரு ணேச ரோமக ரப்பெயர்க்
குண்ட லஞ்செறி காத ரோகுக வென்று சொல்பவர் நாதரோ
விண்ட லம்புகழ் சேய ரோமுது வேத மந்திர வாயரோ
பண்ட ருஞ்சிகி யிறைவ ரோநமை யடிமை கொண்டவொர் பரமரே. 6

**உ**லகெ லாந்தரு நாத ரோதிக ழுலகெ லாம்பணி பாதரோ
உலகெ லாந்தொழு மாத ரோநிலை யுலகெ லாஞ்சொலும் வேதரோ
உலகெ லாம்பட ரார்வ ரோசெறி யுலகெ லாங்கமழ் மார்பரோ
உலகெ லாங்கவ ரூழ ரோநமை யடிமை கொண்டவொர் பரமரே. 7

**யோ**கஞ் செய்குந ரப்ப ரோநிறை யோகி லேவரு துப்பரோ
சோகம் பாவனை மூல ரோவளர் சோகம் பாவனை யாலறாப்
போகஞ் சேர்கெனு நீத ரோபரி பூர ணச்சிவ போதரோ
பாகங் கூர்பவர் தலைவ ரோநமை யடிமை கொண்டவொர் பரமரே. 8

**பி**றப்பி லாதவொர் பெரிய ரோபெரி யார்ப ழிச்சிட வுரியரோ
இறப்பி லாதவொ ரிறைவ ரோவது விதுவெ னச்சொல விசையுமோர்
குறிப்பி லாதவொர் நிலைய ரோவறு குணப ராபர வருளரோ
பறப்பி லாதவொர் முதுவ ரோநமை யடிமை கொண்டவொர் பரமரே. 9

**ஏ**சி லாத சுரேச ரோசக தீச ரோபர மேசரோ
காசி லாவரு ளாள ரோவுழல் கான டாத்தொரு தேரரோ
ஆசி லாவரு ணாச லப்பெய ரானி னைந்த குகேசரோ
பாச மாமல நாச ரோநமை யடிமை கொண்டவொர் பரமரே. 10

மன்மத வருடம் புரட்டாதி மாதம் 28ஆம் தேதி ஆதித்தவாரம்.

---

***7. ஆதன்*** (ஆத:) = *போதலுடையன். நினைத்துழிச் செல்வோனாகலின் "ஆதரோ" என வினாவிக் கொண்டதும் சால்பிற்றேயாம்.*